**“வலுவான நட்புக்கு முக்கியமானது உறுதியும் நம்பிக்கையுமே” என**
**இந்திய உயர் ஸ்தானிகர் குறிப்பிடுகின்றார்”**

**“ஒன்றுபட்டு எதனை நாங்கள் அடைவதற்கு முடியுமென்பது எங்களது ஒருங்கிணைந்த எண்ணங்களினால் மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது”**

கே 1. இந்தியா சுதந்திரம் பெற்றதின் 72 ஆவது ஆண்டுப் பூர்த்தியின் போது இந்தியா மற்றும் இலங்கை மக்களுக்கு நீங்கள் என்ன செய்தியை சொல்வதற்கு விழைகிறீர்கள்?

இந்தியா சுதந்திரம் பெற்றதின் 72 ஆவது ஆண்டுப் பூர்த்தி தின வைபவத்தில், எனது சக இந்தியப் பிரஜைகள் மற்றும் இலங்கையின் ஜனநாயகக் குடியரசு அரசாங்கம் மற்றும் அதன் சிநேகபூர்வமான மக்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை முதலில் தெரிவிக்கிறேன்.

இந்த வருடத்தின் மே – ஏப்பிரலில், நாங்கள் இந்தியாவில் பொதுத் தேர்தலை நடத்தி நிறைவு செய்தோம். உலகின் மிகப் பெரிய ஜனநாயகத் திருவிழாவாக விபரிக்கப்படும் இத்தேர்தலில் சுமார் 900 மில்லியன் தகுதியான வாக்காளர்கள் பங்கேற்றனர். ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் உன்னத வெற்றி, அரசாங்கத்தின் மக்கள் மைய அபிவிருத்திக் கொள்கைகளின் தொடர்தலிற்கான ஆதரவின் ஒரு பிரதிபலிப்பாக அமைந்திருந்தது.

எங்கள் அரசாங்கத்தின் அயலுறவுக் கொள்கையின் மூலாதாரமாக உள்ளது “சப்க்க சத், சப்க்க விகஸ் ஓர் சப்க்க விஸ்வாஸ் - Sabka Saath, Sabka Vikas aur Sabka Vishwas” (அனைவருடனும் ஒன்றாக, அனைவரினதும் அபிவிருத்திக்காக மற்றும் அனைவரினதும் நம்பிக்கையுடனும்) என்பதாகும். இது வெறுமனே இந்தியாவிற்காக மட்டுமானதல்ல. அது முழு உலகிற்குமேயான எங்களது ஓர் அணுகுமுறையென்பதுடன், எங்களது அயல்நாடுகளுக்கு மிகவும் முக்கியமானதாக உள்ளது.

கே 2. அண்மைக் காலங்களில் இந்திய - இலங்கை உறவுகளிலான முன்னேற்றங்களை நீங்கள் எவ்வாறு விபரிப்பீர்கள்?

இலங்கை, எங்களுக்கு விசேடமான ஓர் அயல்நாடு. அண்மைக் காலங்களில், இவ்வுறவு நல்ல முறையில் மீள்புதுப்பிக்கப்பட்டமை காணப்பட்டது. கடந்த ஐந்து வருடங்களில் மைல்கல்லாகக் குறிப்பிடக்கூடிய தருணங்கள் பல இருந்தன. இந்த இருதரப்பு உறவில், பொருளாதார ஆதாரங்களின் கணிசமான வலுப்படுத்துதல் இருந்தது. கடந்த நான்கு வருடங்களில் பிரதம மந்திரி மோடி மூன்று தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கிறார். மார்ச் 2015 இல், அவரது விஜயம் 28 வருடங்களில் இந்தியப் பிரதம மந்திரியொருவரினால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது விஜயமாக அமைந்திருந்தது. மே 2017 இல், வெசாக் தின கொண்டாட்டங்களின் பிரதம அதிதியாக இலங்கைக்கான அவரது விஜயம் எங்கள் உவகைகளின் ஒரு முக்கிய தருணமாக அமைந்திருந்தது.

ஈஸ்டர் தாக்குதல்களின் பின் ஒரு சில வாரங்களிலேயே, இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட முதலாவது உலகத் தலைவராக இந்தியப் பிரதம மந்திரி நரேந்திர மோடி விளங்கினார். இந்த நெருக்கடியான தருணங்களில் இலங்கையுடன் இந்தியா என்றுமிருக்கும் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டும் ஓர் ஒருமைப்பாட்டு விஜயமாக அது அமைந்திருந்தது. தனது இரண்டாவது பதவிக் காலத்தில் தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தின் ஒரு பகுதியாக இலங்கையை ஆக்கியமை, எங்களது பிணைப்புகளின் விசேட தன்மையை மீண்டுமொரு தடவை வலியுறுத்திக் காட்டியது. ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னர், இலங்கை அரசாங்கத்திற்கு, அவர்கள் வேண்டிய அனைத்து ஆதரவையும் நாங்கள் நல்கினோம்.

வெள்ளம், வரட்சி அல்லது எரிபொருள் நெருக்கடி என எதுவாயினும், இலங்கையின் வேண்டுகோள்களுக்கு முதலில் பதிலிறுப்பவராக இந்தியா உள்ளது. இலங்கை சுற்றுலாத் தொழிலிற்கான மிகப் பெரிய மூலவளச் சந்தை இந்தியாவாகும். இந்திய சுற்றுலாப் பயணிகள் எந்தவொரு முன்நிபந்தனைகளுமின்றி இலங்கைக்கு வந்து இலங்கைக் கலாச்சாரத்தை தழுவிக் கொள்கின்றனர். தங்களது திருமண நிகழ்விற்கான ஓர்

இடமாக இலங்கையை மேலும் மேலும் இந்தியத் தம்பதிகள் பலர் தெரிவு செய்கின்றனர். ஓர் அதிகரித்த எண்ணிக்கையிலான இலங்கை மாணவர்கள் உயர் கல்விகளுக்காக இந்தியாவிலுள்ள பிரபல கல்வி நிறுவனங்களைத் தெரிவு செய்கின்றனர். இலங்கையில், முதலீடுகளை இந்திய நிறுவனங்கள் தொடர்ந்து மேற்கொள்கையில், இலங்கை நிறுவனங்கள் இந்தியச் சந்தைகளிலும் புதிய வெற்றிகளை அடைகின்றன. இவையனைத்தும் எங்களது உறவுகளில் வளரும் நம்பிக்கை மற்றும் நெருக்கம் என்பவற்றின் அறிகுறிகளாக அமைந்துள்ளன.

தனிப்பட்டவர்கள் அல்லது நாடுகளுக்கிடையிலான எந்தவொரு நட்பு அல்லது உறவில் முக்கியமாக உள்ள இரண்டு அம்சங்களை நான் அழுத்திக் கூறுவதற்கு விரும்புகிறேன்: அவை உறுதி மற்றும் நம்பிக்கை என்பவையாகும். 1990 சுவசெரிய நோயாளர் காவுவண்டிச் சேவையின் கதை பற்றி நீங்கள் எல்லோரும் அறிவீர்கள் - இது இந்தியாவிருந்து இலங்கைக்கான ஒரு நன்கொடை என்பதுடன் அது இப்பொழுது இலங்கை முழுவதிலுமாகக் கிடைக்கின்றது. ஊகம் எப்பொழுதும் யதார்த்தமானதாக இல்லாதிருக்கலாம். சரியான கண்ணோட்டத்தில் விடயங்களைக் காண்பது முக்கியமானதாகும்.

**கே 3. 1990 சுவசெரிய நோயாளர் காவுவண்டிச் சேவை பற்றி நீங்கள் குறிப்பிட்டீர்கள், இலங்கையில் இந்தியா மேற்கொண்ட ஏனைய சில செயல்திட்டங்கள் எவை?**

இலங்கையின் அனைத்து மாகாணங்கள் முழுவதிலுமாக 70 இற்கு மேற்பட்ட அபிவிருத்திச் செயல்திட்டங்களை நாங்கள் பூர்த்தி செய்துள்ளோம். இவை அனைத்துமே, இலங்கை மக்களின் முன்னுரிமைகளை மனதிலிருத்தி தெரிவு செய்யப்பட்டு மற்றும் அபிவிருத்தி செய்யப்பட்டன. இந்த நன்கொடைச் செயல் திட்டங்களில் இந்திய வீடமைப்புச் செயல்திட்டம் மிகப் பெரியதாகும். 63,000 இற்கும் அதிகமான வீடுகளுக்கு நாங்கள் பற்றுறுதியளித்துள்ளோம், அவற்றுள் 47,000 வீடுகள் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டு மற்றும் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த வருடம் இந்திய வீடமைப்புச் செயல்திட்டம் காலி, மாத்தறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. மேலும், இலங்கையின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஒரு மாதிரிக் கிராமத்தையும் நாங்கள் அமைத்து வருகிறோம். கிராமங்களில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைகளுக்கும் நாங்கள் பங்களிப்பதற்கு இயலுமாகவிருப்பது குறித்து நாங்கள் மகிழ்ச்சியாக உணர்கிறோம்.

கடந்த வருடம், இலங்கையில் மிகப் பெரிய பல்கலைக் கழக கேட்போர் கூடமாக, ருஹுணுப் பல்கலைக் கழக மாணவர்களுக்காக ஒரு கேட்போர் கூடத்தை நாங்கள் நிர்மாணித்தோம். விரைவிலேயே, நாங்கள் சீதோஷ்ணக் கட்டுப்பாட்டு செய்யக்கூடிய ஒரு 5000 மெட்ரிக் தொன் களஞ்சிய குளிர்சாதன வசதியை தம்புள்ளவில் அங்குரார்ப்பணம் செய்யவுள்ளோம். இது, விவசாயிகளின் பயிர் நட்டங்களைக் குறைப்பதற்கு உதவும். பொலன்னறுவையில் உள்ள பிள்ளைகளுக்காக ஒரு தேசிய மும்மொழிப் பாடசாலையும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய 20 செயல்திட்டங்களை வடக்கிலிருந்து தெற்கு மற்றும் கிழக்கிலிருந்து மேற்கு என தற்போது நிறைவேற்றி வருகின்றௌம்.

**கே 4. இந்தியாவின் வளர்ச்சியிலிருந்து எழுகின்ற வாய்ப்புகள் பற்றி நீங்கள் குறிப்பிட்டீர்கள், அதிலிருந்து இலங்கை எவ்வாறு பயனடைவதற்கு முடியும்?**

இந்தியாவில் பொருளாதார நிலைமாற்றங்களின் அளவு மற்றும் வேகம் என்பன முன்னொருபோதிலுமில்லாத வாய்ப்புகளை அளிக்கின்றன. புவியியல் ரீதியான அமைவிடச் சமீபம் மற்றும் வரலாற்று ரீதியான தொடர்புகள் காரணமாக இலங்கைக்கு இந்த வாய்ப்புகள் உடனடியாகவே அணுகும் வகை கொண்டவையாக உள்ளன.

இந்திய நிறுவனங்களின் உலக மற்றும் பிராந்திய விநியோக மற்றும் பெறுமதிச் சங்கிலிகளின் ஒரு பகுதியாக அமைதற்கு இலங்கை நிறுவனங்களை நாங்கள் ஊக்குவிப்போம். தனியான இடை உற்பத்திகளை உற்பத்தி செய்வதில் தங்களுக்கான ஒரு பெயரை இலங்கை நிறுவனங்கள் உருவாக்கியுள்ளன. பல இலங்கை வர்த்தக நாமங்கள் இந்தியாவில் பிரபல்யமாக வருவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். 1.3 பில்லியன் மக்களின் ஒரு ஒருங்கிணைந்த சந்தையை உருவாக்குவதற்கு எங்களது வரிச் சட்டங்களை நாங்கள் எளிமைப்படுத்தியுள்ளோம். இந்தியா, ஓர் அநேக பன்மைத்துவம் கொண்ட ஒரு மிகப் பெரிய சந்தையாகும். இந்தச் சந்தைத் தேவைகளுக்குப் பொருத்தமாக நிறுவனங்கள் தங்களது உற்பத்திகளை வடிவமைத்தல் வேண்டும்;. இது ஒரு சவால் அதே போன்று ஒரு வாய்ப்புமாகும். இதைப் புரிந்து கொள்தல், இந்திய சந்தையில் வெற்றி கொள்வதற்கான ஒரு முக்கிய திறவுகோலாகும்.

இலங்கை நிறுவனங்கள் இந்தியாவின் வளர்ச்சிக் கதையின் பங்குதாரர்களாக அமைவதை நான் ஊக்கப்படுத்துவேன். எங்களால் முடியுமான எந்த வகையிலும் இலங்கை நிறுவனங்களுக்கு உதவுவதற்கு, இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில், நாங்கள் தயாராக உள்ளோம்.

**கே 5. இறுதியாக, இந்திய - இலங்கை உறவு எந்த விடயப் பரப்புகளில் கவனம் செலுத்துதல் வேண்டுமென நீங்கள் உணர்கிறீர்கள்?**

இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரண்டுமே தொன்மையான நாகரீகம் கொண்டவை என்பதோடு இளமையான மக்கட் தொகை கொண்ட தேசங்களாகும். எங்களது இரு நாடுகளிற்குமான இலக்கு, ஒரு சுபிட்சமான, பாதுகாப்பான எதிர்காலத்தை அவர்களுக்கு வழங்குவதற்காக இளைஞர்களின் அபிவிருத்தி அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக இருத்தல் வேண்டும். இதனை அடைவதற்கு, எங்கள் மிகப் பெரிய முதலீடு எங்களது இளைஞர்கள் மீதானதாக இருத்தல் வேண்டும். கல்வி மற்றும் திறன் விருத்தி என்பவை மீது நாங்கள் கவனம் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், அவர்களை வழமையான முறையை விட்டு, கட்டத்திற்கு வெளியே சிந்திப்பதற்கு, பெரிதான வகையில் சிந்திப்பதற்கு உந்துதல் வேண்டும்.

இந்திய மற்றும் இலங்கை இளைஞர்கள் ஒருவரிடமிருந்து மற்றையவர் கற்றுக் கொள்வதற்கு அதிகம் உள்ளது என நான் உணர்கிறேன். சந்திரனுக்கான பயணத்திற்கென உள்நாட்டில் கட்டியமைத்த சந்திராயன் 2 விண்கலத்தை அண்மையில் நாங்கள் வெற்றிகரமாக ஏவியிருந்தோம். இவை, எங்களுக்கு பகிர்ந்து கொள்வதற்கும் மற்றும் கற்றுக் கொள்வதற்குமான சிறந்த வாய்ப்புகளாகும். விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், விண்வெளித் துறையில் ஆராய்ச்சிக் கூட்டிணைதல்களை நாங்கள் ஊக்குவித்தல் வேண்டும்.

இந்தியா மற்றும் இலங்கையில் கல்வி கற்பதற்கு 750 இற்கும் மேற்பட்ட புலமைப்பரிசில்களையும், மற்றும் பல்வேறு துறைகளில் இளைஞர்கள் பணியாற்றுவதற்கு இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 400 இற்கும் அதிகமான பயிற்சி இடங்களையும் இலங்கை மாணவர்களுக்காக நாங்கள் வழங்குகிறோம். பிரபல்யமான இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான நுழைவுப் பரீட்சைகள் இப்பொழுது இலங்கையில் நடத்தப்படுகின்றன. இந்தியாவிலுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதிக்காகவும் இலங்கை மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கு முடியும்.

இந்த ஒத்துழைப்புகளை மேலும் அதிகரிப்பதற்கு முடியுமென நான் நம்புகிறேன், மேலும் நிறுவன ரீதியான பங்குடமைகள் மற்றும் இடைவினையாற்றுதல்களை நாங்கள் ஆரம்பித்தல் வேண்டும். களனிப் பல்கலைக் கழகம் மற்றும் டெல்லிப் பல்கலைக் கழகத்தின் கீழான ஸ்ரீ ராம் கல்லூரி என்பன ஒரு பங்குடமையில் இணைந்துள்ளன. கொழும்பு ரோயல் கல்லூரி மற்றும் சன்வார், லோரன்ஸ் பாடசாலை என்பனவும் ஒரு மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்துள்ளன. இவை ஒரு சில உதாரணங்களாகும், ஆனால் இவற்றை அடிப்படையாகக் கொண்டு மேலும் நாங்கள் கட்டியமைப்பதற்கு முடியும்.

விவசாயம், தோட்டக்கலை, கால்நடை மற்றும் விலங்கு வேளாண்மை போன்ற துறைகளிலும் நாங்கள் அநேகம் பகிர்ந்து கொள்வதற்கு முடியும். இதற்கான பட்டியல் முடிவற்றது. இந்திய - இலங்கை உறவுகள் எங்களது கூட்டு இலட்சியங்கள் மற்றும் அபிலாசைகள் என்பவற்றினால் வார்த்து வடிவமைக்கப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டு மற்றும் வலுப்படுத்தப்பட்டவையாகும். ஒன்றுபட்டு நாங்கள் எதனை அடைவதற்கு முடியுமென்பது எங்களது ஒருங்கிணைந்த எண்ணங்களினால் மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

*****